2nd November 1966]

*அணைக்கட்டுகள்*

* 326 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலுகாவில் உள்ள அக்கினி ஆற்று அணைக் கட்டுத் திட்ட வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துவிட்டனவா ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) அதில், இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) ஆம்.

(இ) ரூ. 17,20,000.

(உ) ரூ. 10,87,929.

* 327 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to construct a dam across Vaigai near கழுவூரணி (Kazhuvoorani) in Ramanathapuram taluk east of Ramanathapuram so as to help the ryots east of Ramanathapuram till Mandapam and also prevent wastage of Vaigai water into the sea?

THE HON. SRI V. RAMAIAH : There is no such proposal, Sir.

*Vaigai Canal Modernisation Scheme*

* 328 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) when the work connected with the Vaigai Canal Modernisation Scheme will be taken up; and

(b) the probable time required for the completion of the same?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The Government of India and the Planning Commission have been addressed for its technical clearance for the scheme. As soon as the clearance is accorded by the Planning Commission, the scheme will be taken up for implementation. It is premature to say now when it will be completed.

**திரு. வை. சங்கரன் :** இந்தத் திட்டத்தின் செலவு என்ன என்று மதிப்பிடப்படுகிறது? அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள், பலன் கள் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தத் திட்டம் பாசன ஆதாரங் களுக்கு ரொம்ப முக்கியமான திட்டம். இதிலே அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவுக்கு வந்திருக்கிறது. இதற்கு 3.95 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் ஏறத்தாழ 367 கண்மாய்களுக்குப் பாசன வசதி உண்டு பண்ணக்கூடிய திட்டம். இதனால் 1,02,936 ஏக்கர் பாசன வசதி பெறும்.

### குழந்தைகள் பாலுணவு

* 329 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. வை. சங்கரன் } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குழந்தைகள் பால் உணவுக்கான பங்கீட்டு முறையை இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து எடுத்துவிட்டது உண்மையா?

(இ) ஆமெனில், பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு விட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No. Sir; but a free sale has been ordered with effect from 1st June 1966, subject to certain conditions.

(*b*) Yes, Sir.

திரு. ம. கமலநாதன் : சென்னையிலே திறக்கப்பட்டிருக்கும் சூப்பர் மார்க்கெட்டில் குழந்தைகள் உணவு வாங்கச் செல்பவர்கள், அந்தக் குழந்தை உணவுப் பொருளின் விலை என்னவோ அதே அளவுக்கு வேறு பொருள்கள் வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுவதை அரசாங்கம் அறியுமா ?

(பதில் இல்லை)

திரு. சா. கணேசன் : "Subject to certain conditions" என்று அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டார்கள். அந்தக் கண்டிஷன்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஹோல்சேல் ஆக வாங்கக் கூடியவர்களும், ரீடைலர்சும் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகளை வைத்திருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பு டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் 'அமுல்' போன்ற குழந்தை உணவுப் பொருள்கள் கிடைக்கலாம் என்ற முறை இருந்தது. அந்த முறை மாற்றப்பட்டு இப்போது ஃப்ரீ சேல்ஸ் உத்தரவு வைத்திருக்கும் சமயத்தில் 'அமுல்' போன்றவை கிடைக்காமல் நகரத்தில் ஏராளமான மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்தக் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தக் கஷ்டத்தைப் போக்கத் தான் முன்பு நடவடிக்கை எடுத்தோம். அப்போது அதற்கு எதிர்ப்பு. பொதுவாக, இந்த குழந்தை உணவுப் பொருள்கள்